# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **03.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ**்**தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 13839/SCIC/2023</u>**

திரு. எஸ்.பி.கேசவன் — மேல்முறையீட்டாளர்
எண். 7/307, நகராட்சி பூங்கா எதிரில்
புதுநகர், எமனேஸ்வரம் அஞ்சல் - 623 707
பரமக்குடி, சிவகங்கை பதிவு மாவட்டம்.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார் பதிவாளர் அலுவலகம்
நயினார்கோவில், இராமநாதபுரம் மாவட்டம்.

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 29.03.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 02.05.2023 |
| 3 | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 01.08.2023 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 07.01.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / பத்திரப் பதிவு அலுவலகம், நயினார்கோவில், பரமக்குடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "பூர்வீகச் சொத்தை மூதாதையர்கள் மரணமடைந்த பின் முதல் தலைமுறை வாரிசுகள் (ஆண், பெண்) இரண்டாம் தலைமுறை வாரிசுகள் மேஜர் வயதுடன் இருக்கும் போது முதல் வாரிசை சேர்ந்தவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் இருக்கும் நிலையில் முதல் தலைமுறையைச் சேர்ந்த ஒருவரும், இரண்டாம் தலைமுறையை சேர்ந்த பலரும் உள்ள நிலையில் அதில் ஒருவர் மட்டும் மூதாதையர்கள் சொத்தை மற்ற வாரிசுகளின் ஒப்புதல் பெறாமலும் கவனத்திற்கு தெரியப்படுத்தாமலும் விற்பனை செய்ய முழு அதிகாரம் படைத்தவாராவார் என்ற அடிப்படையில் பத்திரப் பதிவு மேற்கொள்ளலாம் என்ற விதி முறை பதிவுத் துறை சட்டமோ அல்லது இதர சட்ட விதிகளைப் பின்பற்றி மேற்படி முறையில் விற்பனை பத்திரப் பதிவு செய்யலாம் என்பதற்கான சட்ட விதிமுறைகளோடு தகவல் அளித்திடவும்" என்பன போன்று 7 (ஏழு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராவில்லை. எவ்வித கடிதமும் மனுதாரரிடமிருந்து பெறப்படவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள்-2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அன்னாரது வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.பாஸ்கரன், சார்பதிவாளர், நயினார்கோவில் சார்பதிவகம், சிவகங்கை பதிவு மாவட்டம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கெனவே 12/04/2023, தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் அனுப்பியுள்ளதோடு, மீண்டும் 07/01/2025 தேதியிட்டும் தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, ஆணையத்தின் நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையைப் பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 13839/SCIC/2023</u>**

**பெறுநர்**
**பொதுஅதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
நயினார்கோவில், சிவகங்கை பதிவு மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**
திரு. எஸ்.பி.கேசவன்
எண். 7/307, நகராட்சி பூங்கா எதிரில்
புதுநகர், எமனேஸ்வரம் அஞ்சல் - 623 707
பரமக்குடி, இராமநாதபுரம்.

RG/PC